1981 மார்ச் 3]

தேவக்கோட்டை—திருவாடானை நகரப் பேருந்து வழித்தடம்

வினா எண் 352—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவக்கோட்டையிலிருந்து திருவாடானை வரை செல்லும் நகரப்பேருந்து (டவுன்பஸ்) இராசசிங்கமங்கலம் வரை நீட்டிக்கும் யோசனை அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ச. அங்குசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தேவக்கோட்டையிலிருந்து திருவாடானை வரை செல்லும் டவுன் பஸ் அதிகமான வருமானத்தோடு நல்ல முறையில் ஓடிக்கொண்டு இருக்கிறது. அந்த பஸ்ஸை இராசசிங்கமங்கலம் வரையில் நீட்டிப்புச் செய்தால், அந்தப் பகுதியில் உள்ள 80 கிராம மக்கள் பயன்பெறுவார்கள். நீண்டவழித்தட பேருந்துகளும் வழியில் நிற்காததால், பேருந்து வசதி இல்லாத காரணத்தால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஸ்டப்படுகிறார்கள். ஆகவே, ஆர்,எஸ். மங்கலம் வரையில் அந்த பஸ்ஸை விட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தேவக்கோட்டையிலிருந்து திருவாடானை செல்லும் அந்தப் பேருந்தை அதற்கு மேலே இருக்கின்ற ராசசிங்கமங்கலத்திற்கு நீட்டிப்புச் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். அந்த இடம் 30 கிலோ மீட்டர் தூரதிற்கு அதிகமாக இருக்கிற காரணத்தால் அந்தப் பேருந்தை நீட்டிப்பு செய்ய முடியாது என்று சொல்லியிருக்கிறேன். அதற்காகத் தனிப் பேருந்து விட வேண்டும் என்று சொன்னால், அதைப் பற்றி ஆராய்ந்து தனியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தேவக்கோட்டையிலிருந்து திருவாடானை செல்லும் பஸ்ஸை இராசசிங்கமங்கலத்திற்கு நீட்டிக்க முடியாது, 30 கிலோ மீட்டருக்குமேல் தூரம் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது தவறானது. அதற்கு இடையிலே உள்ள தூரம் 28 கிலோ மீட்டர்தான். அரசாங்கம் 30 கிலோ மீட்டர் தூரம் வரையில் டவுன் பஸ் விடலாம் என்று முடிவு எடுத்து

இருப்பதால், இராசசிங்கமங்கலத்திற்கு தேவக்கோட்டையிலிருந்து டவுன் பஸ் விடுவதற்கு மீண்டும் பரிசிலனை செய்து, உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தேவக்கோட்டையிலிருந்து இராசசிங்கமங்கலத்திற்கு எவ்வளவு தூரம் என்கிற கணக்கு என்னிடத்தில் இல்லை. ஆனால் திருவாடானை வரும்பேருந்தை இராசசிங்கமங்கலத்திற்கு நீட்டிப்பு செய்ய வேண்டும் என்று கேட்டு இருப்பதால், அந்த தூரம் 9•45 கிலோ மீட்டராகும். ஏற்கெனவே அந்தப் பேருந்து 24 கிலோ மீட்டர் ஓடிக்கொண்டு இருப்பதால், அதை நீட்டிக்க முடியாது. எனவே 30 கிலோ மீட்டருக்கு மேல் அந்த தூரம் இருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது தேவக்கோட்டையிலிருந்து டவுன் பஸ் செல்வது குறித்த கேள்வியாக இருந்தாலும், வடாற்காடு மாவட்டம் வேலூரில் ஓடும் தந்தை பெரியார் பஸ்கள் வயதான பஸ்களாக, பழைய பஸ்களாக இருக்கின்றன.............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வயதான பஸ்கள் என்றெல்லாம் சொல்வது சரியல்ல. மூலக்கேள்வியை ஒட்டியதாக இல்லாததால், அனுமதி மறுக்கப்படுகிறது.

நகரப் பேருந்துகள் செல்லும் அதிகபட்ச தூரம்.

வினா எண் 353—திரு. வி. பாலகிருஷ்ணன், திரு. வேடசந்தூர் வி. வி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரப் பேருந்துகள் (Town Bus) அதிகபட்சம் செல்லும் தூரம் 25•5 கி.மி. என்றிருப்பதை இன்னும் அதிகப்படுத்தும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆமெனில் எத்தனை கி. மீட்டர் வரை அதிகரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) 30 கி. மீ. வரை அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போதிலிருந்து செயல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.